(முற்பகல் 9-40)

அவரிடமிருந்து கீழ்க்கண்ட பதில் வரப்பெற்றுள்ளது.

"தங்களது கடிதம் கிடைத்தது. 23—7—1977 தேதியிட்ட 'அலை ஓசை'-யில் வெளிவந்த 'சட்ட சபையில் பத்திரிகை படிக்கலாமா?' என்ற செய்தியில் தாங்கள் கூறியிருப்பது போல் தவறு நடந்துள்ளது. அதற்காக எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த தவறான செய்திக்காக இன்றைய (3—8—1977) 'அலை ஓசை' இதழில் திருத்தம் வெளியிடப் பட்டிருக்கிறது என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்."

பதிலில் குறிப்பிட்டுள்ளபடியே, 3—8—1977 அன்று 'அலை ஓசை' பத்திரிகையில் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. பத்திரிகையில் திருத்தம் வெளியிடப்பட்டு, வருத்தமும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பேரவை நடவடிக்கைகளை வெளியிடும்போது பத்திரிகைகள் மிகக் கவனமாக இருக்க வேண்டுமென்றும், இம்மாதிரி தவறு களுக்கு இடமளிக்காமல் இருப்பது நலம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டம் சின்னமனூர் காவல் நிலையத்தில் திரு. ஒச்சத் தேவர் 28—7—1977 அன்று மரணம் அடைந்தது குறித்தும், அதனால் பொது அமைதி கெடத்தக்க விதத்தில் அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். "மதுரை மாவட்டம், சின்னமனூர் காவல் நிலையத்தில் திரு. ஒச்சத் தேவர் என்பவர் 28—7—1977 அன்று மர்மமாக மரணம் அடைந்தது குறித்தும், அதனால் பொது அமைதி கெடத்தக்க விதத்தில் அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும்" விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவையின் அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1977 ஆகஸ்ட் 5]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, போலீஸ் நிலையங்களில் காவலில் வைக்கப்படுபவர்கள் இப்படி அடிக்கடி துர்மரணத்திற்கு ஆளாவது சகஜமாகி விட்டிருக்கிறது என்பதை இங்கே அடிக்கடி வருகின்ற ஒத்தி வைப்புத் தீர்மானங்களே நமக்கு எடுத்துக் காட்டுபவைகளாக அமைந்திருக்கின்றன. இந்த சின்னமனூர் பகுதியில் ஓச்சத் தேவர் என்ற இவர் சட்டத்திற்கு புறம்பான தொழிலில் ஈடுபட்டு இருந்ததாகவும், அதற்காக அவர்களைக் கைது செய்து காவல் துறையினர் போலீஸ் காவலில் வைத்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. 27—7—1977 அன்று அவர்கள் செம்மையாக அடிக்கப்பெற்று அங்கேயே மரணம் அடைந்த நிலையில் அவர்களுடைய பிணத்தைப் போலீஸ் லாக்கப்பிலிருந்து வெளியேற்றி ஊருக்கு வெளியே போட்டு விட்டதாகவும் பிறகு ஊர் மக்கள் அதனைப் பார்த்து போலீஸ்காரர்களிடம் விளக்கம் கேட்டதாகவும் இதனால் போலீஸ்காரர்களுக்கும், ஊர் மக்களுக்கும் இடையில் தகராறுகள் ஏற்பட்டு அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய நிலைமைகள் இருப்பதாவும், போலீஸ் காரர்கள் நடந்து கொண்ட தவறான விதத்தின் காரணமாக சர்வ கட்சியினரும் அங்கே போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதாகவும் எனக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன.

நோட்டீஸ்களைக்கூட எல்லாக் கட்சியினரும் வெளியிட்டிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசீய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி ஆகிய அத்தனை கட்சிகளும் நோட்டீஸ்களை வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும் ஒரு மனுவை அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்து அதனுடைய நகலை எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதனால் அமைதிக்குப் பெருத்த ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே இந்தச் சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, மிகவும் அவசரமும், அவசியமும் வாய்ந்த முக்கியத்துவம் உடைய இந்தப் பிரச்னையை நாம் ஆய்வு செய்வதற்காக இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் என்னுடைய தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மதுரை மாவட்டம் சின்னமனூர் காவல் நிலையத்தில் திரு. ஒச்சத் தேவர் 28—7—1977 அன்று மரணம் அடைந்தது குறித்தும் அதனால் பொது அமைதி கெடத்தக்க விதத்தில் அங்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்தும்

[1977 ஆகஸ்ட் 5

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, உத்தமபாளையம் தாலுகா, தேவாரம் கிராமத்தைச் சேர்ந்த ஒச்சத் தேவர் என்பவர் நெடுஞ்சாலை புறக்காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் ஒருவரால் கடந்த ஜூலை மாதத்தில் 27-ம் தேதியன்று மதுவிலக்கு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு சின்னமனூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டார். அவர் மீது மதுவிலக்குத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவர் அன்றே ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கு மறுநாள், அதாவது 28—7—1977 அன்று பிற்பகலில் கிராம அதிகாரியும் மாயத் தேவர் என்பவரும் மேற்கூறிய ஒச்சத் தேவர் சின்னமனூர் கடைவீதியில் இறந்து கிடப்பதாகக் கூறினார்கள். உடனே, பெரியகுளம் கோட்டாட்சித் தலைவருக்குத் தகவல் அனுப்பப்பட்டது. அவர், பிரேத விசாரணையினை முடித்து விட்டு பின் பிரேதப் பரிசோதனைக்காக உடலை உத்தமபாளையம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். பிரேதப் பரிசோதனையின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. போலீஸார் மீது இம்மரணம் குறித்து குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டுள்ளதால் உண்மை நிலையினை அறியும் பொருட்டு பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் P.S.O. 145 விதிப்படி விசாரிக்கும்படி கோரப்பட்டுள்ளார். அவரின் விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் அரசு தகுந்த நடவடிக்கையெடுக்கும். அமைதியான சூழ்நிலை அங்கு நிலவி வருகிறது. ஆகவே, இது குறித்து விவாதிப்பதற்கு பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS